மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. கண்ணனந்தல் பகுதி சார்பில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்ட தீர்மான விளக்கம் செப்டம்பர் 9ஆம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சியில் மாவட்டம் சார்பாக பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி தீர்மானத்தை விளக்கி சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், பெ. சசிகுமார், ஜான் கௌரி சங்கர், எஸ் வி மணிராஜ், செங்கிஸ்கான், தன்ராஜ் இளைஞர் அணி இளங்கோ வன்னி முத்து பாண்டியன், ரவிச்சந்திரன் மற்றும் திரளான பகுதி கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

பள்ளிக்கல்வித் துறைக்கு

ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக வழங்கிடுவீர்!

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, செப்.2-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு ;

கடந்த 2004 முதல் சர்வ சிக்ஷா அபியான் என்ற பெயரிலும் தற்போது சமக்ரசிக்ஷா அபியான் என்ற பெயரிலும் தமிழ்நாடு பள்ளிக்கல்விதுறைக்கு ஒன்றிய அரசு 60 சதவீதமும் மாநில அரசு 40 சதவீதமும் நிதி ஒதுக்கி வருகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஆசிரியர்கள்,ஆசிரியர் பயிற்றுனர்கள், பகுதிநேர ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கான உதவித் தொகை, கலைத்திருவிழா, வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல் போன்ற மாணவர்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

எஸ்.எஸ்.ஏ. திட்டத்திற்கு 202425 கல்வியாண்டில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய மொத்த நிதியில்,ஒன்றிய அரசு 4 தவணைகளில் ரூ.2152 கோடி வழங்க வேண்டும். 2024 ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை வழங்க வேண்டிய முதல் தவணை நிதி ரூ. 573 கோடியை இதுவரை விடுவிக்கவில்லை.

ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்பதற்காக சுமார் 20 ஆண்டுகளாக செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை நிறுத்த முடியாது. இத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி வருவதால் தான் தமிழ்நாடு கல்வியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

பள்ளிக்கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என்று ஒன்றிய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சரை தமிழ்நாடு பள்ளிக்கல்விதுறை அமைச்சர் மற்றும் கல்வி அதிகாரிகள் சந்தித்து கேட்டபோது, தமிழ்நாடு தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும்,பிஎம்ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் தான் உடனடியாக நிதி விடு விக்கப்படும் எனக் கூறியதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதி இருந்ததற்கு, நிதியை ஒதுக்கீடு செய்யாமல், பிஎம்ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று பதில் அளித்துள்ள ஒன்றிய அரசிற்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையை நடைமுறைபடுத்துவது, 3,5,8,10,12 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்துவது, குலக்கல்வித்திட்டத்தை அமுல்படுத்துவது, தமிழ்நாட்டுக் கலாச்சாரம் பண்பாட்டிற்கு எதிரானதுஎன்பதால்தேசியக்கல்விக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிஎம்ஸ்ரீ ஸ்கூலை தமிழ்நாட்டில் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டிற்கென தனியாக கல்விக் கொள்கையை உருவாக்கிட ஒரு குழுவை அமைத்து அக்குழுவின் அறிக்கையைப் பெற்று விரைவில் அமுல்படுத்த உள்ளது. இந்நிலையில் தேசியக் கல்விக் கொள்கையையோ, பிஎம்ஸ்ரீயையோ எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், சரண்டர் தொகை விடுவிக்க வேண்டி ஆசிரியர் சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை தமிழ்நாடு அரசிடம் வைக்கும் போது, ஒன்றிய அரசிடம் இருந்து வர வேண்டிய நிதி வந்து சேரவில்லை. தமிழ்நாடு அரசின் நிதியில் இருந்து தான் செலவு செய்கிறது. நிதிப்பற்றாக்குறை காரணமாகவே ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு திமுக தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறிதிகளை நிறைவேற்றிட மேலும் காலதாமதம் ஆகிறது என்கின்றனர்.

இனியும் ஒன்றிய அரசு நிதியை விடுவிக்காமல் காலம் தாழ்த்தினால், இன்னும் ஒரு சில மாதங்களில் தமிழ்நாட்டில் சிறப்பு ஆசிரியர்கள்,பகுதி நேர ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கல்வி உதவி தொகை, வட்டார கல்வி வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் உள்ளிட்டோருக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை உருவாகிவிடும். இதனால் சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கும் நிலை உருவாகும்.

அதே போல மாணவர்களின் அறிவுசார் கலைத்திறன்களை போட்டிகள் மூலமாக வெளிக்கொண்டு வரும்,கலைத் திரு விழாக்களை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.கல்வி உதவித் தொகை வழங்குவதும் பாதிக்கும்.

ஒன்றிய அரசின் வரி வருவாயில் அதிக நிதி வழங்கி முக்கிய பங்காற்றும் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசின் செயல் கடுமையான கண்டனத்திற்குரியது..

அரசியல் காரணங்களுக்காக தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நிதியை விடுவிக்க முடியும் என்று கூறி நிதியை விடுவிக்காமல் உள்ள ஒன்றிய அரசின் வாதம் ஏற்புடையத்தல்ல. ஏழை எளிய அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாது,அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் பாதிப்பை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு உடனடியாக தமிழ்நாட்டிற்கு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திற்காக வழங்க வேண்டிய நிதியை எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி ஒன்றிய அரசு உடனடியாக விடுவித்திட வேண்டும்.

ஒன்றிய அரசு எடுக்கும் நடவடிக்கையைப் பொறுத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி அனைத்து ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி ஒன்றிய அரசை எதிர்த்து போராட்ட நடவடிக்கைகளை விரைவில் அறிவிப்போம்.

இவ்வாறு கு.தியாகராஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

கலைஞர் நகரில் வட்டக் கழகக் கூட்டம்!

சென்னை, செப். 2 – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் வட்டக்கழக செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு என்.சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் குணசேகரன், ஏ.எம்.வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ., கணக்கு தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஸ்டாலின், பகுதி கழகச் செயலாளர் கே.கண்ணன், மு.ராசா, துரைராஜ், பி.எஸ். முருகேசன், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், சசிகுமார்,எஸ் நிஷா சையத், கனிமொழி தனசேகரன், உமாபதி, அஜந்தா ரவி ,தியாகு, பாபு, ரவி ,பெரியசாமி, சீனிவாசன், தணிகாசலம், டி.செல்லா, ராஜேஸ்வரி, டைகர் பழனி, தனசேகரன், ஜெகதீசன், நா.பாலா, சதீஷ், எஸ்.புகழ் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி அனைத்து அணி நிர்வாகிகள் செயல்வீரர்கள் மற்றும் போக்குவரத்து கழக தொழிலார்கள் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் 63.19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

சமையலறை கூடங்கள், நியாய விலைக் கடைகள்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, செப். 2 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அன்னமங்கலம் ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடம், தேவனூர் ஊராட்சியில்13.14. லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலை கடை, வடவெட்டியில் ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலை கடை மற்றும் சித்தேரி ஊராட்சியில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ்23.56 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடம்,அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 5. 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காலை சிற்றுண்டி சமையலறை கூடம், மற்றும் தேவனூர் ஊராட்சியில் 5.86 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமையலறை கூடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் தேவனூர் சாந்தி சக்திவேல், சித்தேரி சிவராமன், வடவெட்டி ராஜா மாணிக்கம்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்

நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு 63 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் சியாமளா ஜெய்சங்கர்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவ சண்முகம், சையத் முகமது,ஒன்றிய பொறியாளர்கள்தண்டபாணி, நாராயணமூர்த்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மதுசூதனன், கூட்டுறவு சார்பதிவாளர் ராஜகுமாரன்,ஒன்றிய நிர்வாகிகள் சரவணன், செந்தில்குமார், வெங்கடேசன் ,சிவசக்தி, மன்னஏழுமலை ,இளைஞரணி நிர்மல் குமார், ஊராட்சி நிர்வாகிகள் அன்னமங்கலம் உதயசூரியன், குமாரசாமி, நாராயணன், மல்லிகா, தேவனூர் அண்ணாமலை ,கார்த்திகேயன், கோபி, சித்தேரி காந்தி ,பழனி , வடவெட்டி பெருமாள், ஏகவண்ணன் ,தாமோதரன், தேசிங்கு ,ஆனந்தன், பூங்காவனம் , மற்றும் துறை சார்ந்தஅலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி மீனாட்சிபுரம் பேரூர் செயலாளர் செல்வம் ஏற்பாட்டில் பொது உறுப்பினர் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். செந்தில் முருகன், கண்ணன், ராஜா ரமேஷ், முல்லை சேகர் மற்றும் பேரூர் பொறுப்பாளர்கள் வார்டு செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருச்சி மாநகரம் - (மேற்கு)

பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் மு. அன்பழகன் அறிக்கை!

திருச்சி, செப்.2-

திருச்சி மாநகரம் மேற்கு செயலாளர் மு. அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி மாநகரம் (மேற்கு) தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (2.9.2024-திங்கள்கிழமை) காலை 10 மணியளவில், மாநகர தி.மு.க. அவைத்தலைவர் இரா.இராமலிங்கம் தலைமையில் மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள எல்.கே.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் க.வைரமணி முன்னிலை வகிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர், தமிழ்நாடு அரசு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்துகொண்டு கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற, இன்னாள் - முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்,செயல் வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு உலகையும் தமிழ் வெல்லட்டும்!

‘கணையாழி’ தலையங்கம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு நினைவாக
நூறு ரூபாய் நாணயத்திலும்
‘தமிழ் வெல்லும்!’

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள
நாணயத்தில் ‘தமிழ் வெல்லும்’
இடம் பெறச் செய்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

சங்க காலம் முதலே
தமிழர்களுக்கு இருந்திருக்கிறது நாணயம்!

சங்க இலக்கியங்களிலும்
அணிகலனாகக் காசு!
நாள், மலர், காசு, பிறப்பு என்று
வெண்பாவின் இறுதிச் சீர் வரிசையிலும்
காசு!

இப்போதும் பலர்
வீட்டுத் திருமணங்களின்
சீர் வரிசையில் காசு!

உலகில் தொன்மையான
முத்திரை நாணயம்
கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரியது.
அந்தக் கால நாணய வரலாற்றுக்குப்
பங்களிக்கும் இடங்களாகத்
தமிழ் நாட்டில் கீழடியும் கொடுமணலும்!.

பிறகு வந்த நாணயங்களில்
அரசனின் பெயரும் சின்னமும்!
விஜய நகர ஆட்சிக்கு முன்புவரை
நாணயத்தில்
கடவுள் இருந்ததாகத் தெரியவில்லை.

இப்போது நாடும் சின்னமும் எழுத்துமாக
உலகெங்கும் நாணயங்கள்!

நாணயங்களில் மொழி இருக்கும்
ஆனால்
நாணய வரலாற்றில் எங்கேயும்
இதுவரை தன் மொழி வெல்லும் என்ற
பிரகடனம் இடம்பெறவில்லை
சாதித்திருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

நாணயம் வெளியிடும் அதிகாரம்
மாநில அரசிடம் இல்லாத போதும்
தமிழ் வெல்லும் என்று
ஒன்றிய அரசையே
சொல்ல வைத்திருக்கிறார்!

தனிப்பட்டவர்களின்
சொல்லில் அடைபட்டுக் கிடந்த அறிவு
அவருக்குப் பின்பும் பயன்பட
எழுத்தில் தன் ஆயுட் காலத்தை
ஏற்றிக் கொண்டது.

அச்சு வாகனத்தில் வந்த அறிவு
எல்லை கடந்து இப்போது
எல்லோருக்கும் பயன்பட
இணையத்தில் வருகிறது!

உரிமைத் தொகை வேண்டாமல்
கலைஞர் நூல்களை நாட்டுடைமை
ஆக்கி.
அறிவைப் பொதுவுடைமை ஆக்கி
இருக்கிறார்!

நாட்டுடைமையான
முத்தமிழ் அறிஞரின் படைப்புகள்
உலகில் எந்த நாட்டிலிருந்தும்
எந்த நேரத்திலும் படிக்க
இணையத்தில் கிடைக்கப் போகின்றன..

அறிவு என்றாலே செயற்கைதான்
ஆனால்
செயற்கை நுண்ணறிவு
தனிப்பட்ட மனிதனை மிஞ்சிய
அறிவின் கருவூலம்!
ஏனெனில்
இலட்சக் கணக்கான ஆண்டுகளாக
வளர்ந்து வரும் மரபு அணுக்களைக்
கொண்ட
கோடிக்கணக்கான மக்களின்
மூளைகளின் சிந்தனை அது.

பார்க்கவும் கேட்கவும்
புரிந்து கொள்ளவும்
பதில் சொல்லவும்
சொன்னதைச் செய்யவுமாக
இணைய உலகில் நிறைய செயலிகள்!

எப்போதும் தன்னைப்
புதுப்பித்துக் கொள்ள
எல்லாவற்றிலிருந்தும்
கற்றுக்கொள்கிறது.

அதற்கென்று தனியாக
எதுவும் தெரியாது.
ஆனால் என்ன கேட்டாலும்
யாரை விடவும் கூடுதலாக
அதற்குப் பதில் தெரிகிறது!

உரையாடுகிறது.
சொன்னால் கவிதை கட்டுரை
எழுதுகிறது.
மொழிபெயர்க்கிறது.

ஆனால் அதற்கென்று தனியாகத்
தாய்மொழி ஏதும் இல்லை
ஆனாலும்
கேட்கும் மொழியில்
அரசியலோ ஆதிக்கமோ இல்லாமல்
பதில் சொல்லத் தெரிந்திருக்கிறது.
சீனாவில் பல மருத்துவ மனைகளில்
இப்போதே பணிபுரிகிறார்கள்
இயந்திர மனிதர்கள்!

சீன மொழியின்
வட்டார வழக்கையும் புரிந்து
நோயாளிகளுக்குப் பதில்
சொல்கின்றனவாம்
ரோபோக்கள்!

குழந்தையை ரோபோவிடம் விட்டுவிட்டு
அலுவலகம் செல்லப் போகிற
காலம் வந்துகொண்டிருக்கிறது!
இனிவரும் காலங்களின்
மக்கள்தொகைக் கணக்கெடுப்பில்
இயந்திர மனிதர்களுக்கும்
இடம் இருக்கும் போல!

இது அறிவின் விடுதலைக் காலம்
உயிரினங்களில்
மனிதனை உயர்த்தி வைத்திருப்பது
அறிவு.
அறிவின் பரிணாமத்தில்
நெருப்பு, மின்சாரம், இணையம் கடந்து
இப்போது செயற்கை நுண்ணறிவு!

தமிழ்ப் பாடப் புத்தகத்திலும்
செயற்கை நுண்ணறிவுக்கு
இடம் கிடைத்திருக்கிறது தமிழ் நாட்டில் !

இப்போது உலகை ஆள்வது
அதிகாரம் இல்லை
அறிவு!
வரும் காலத்தில் இனி ஆளப் போவது
செயற்கை நுண்ணறிவு!

அறிவு, பாதுகாக்கும்;
பகைவர்களும் அழிக்க முடியாத
அரணாகும்.
அதனால் அறிவுடையார் ஆவது
அறிவார் என்று
திருவள்ளுவர் சொல்கிறார்!

இதோ முதல்வரை வரவேற்க
மைக்ரோ சாப்ட்
தலைமையகத்திலும் தமிழ்!

கூகுள் நிறுவன
செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள்
தமிழ்நாட்டில்!

தமிழ்நாடு முதலமைச்சர்
நம்பிக்கை தந்திருக்கிறார்.

இனி
செயற்கை நுண்ணறிவு உலகையும்
தமிழ் வெல்லட்டும்!

அன்புடன்
ம.ரா.

-நன்றி
‘கணையாழி’
செப்டம்பர் - 2024